உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.603/2023

பெயர் : செல்வம் (அ.சா.12)
தகப்பனார் பெயர் :விஜயன்
கணவர் பெயர் :
வயது :43
கிராமம் :பெரியகற்பூரம்பட்டி, கம்பூர்
வட்டம் :மேலூர்
தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

04.11.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. செல்வமணி அ.சா.1 காத்தம்மாள் அ.சா.2 இருவரையும் தெரியும். அவர்கள் என் பங்காளி வீட்டுக்காரர்கள். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் நான் காலையில் வேலைக்கு சென்றுவிட்டேன். அப்போது சண்டை நடந்ததாக சொன்னார்கள். அப்போது நானும், அங்கு பேசிக்கொண்டிருக்கும்போது நின்று கொண்டிருந்தேன். அப்போது போலிசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். சாட்சியிடம் பார்வை மகஜர் காட்டப்பட்டு அதில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் மரக்கைப்பிடி வைத்த கத்தி காட்டப்பட்டு அது தான் பார்த்தில்லை என்று சாட்சி குறிப்பிடுகிறார். காவலர்கள் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மற்ற விபரம் எனக்கு தெரியாது

எ.த.கு.வி:

நான் கையெழுத்து போட்டிருந்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் நான் படிக்காததால் எனக்கு தெரியாது. காவல்துறையில் இருந்து யார் என்னை விசாரித்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் கையெழுத்து போட்ட நபர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து போட்ட பிறகு என்னை காவலர்கள்

ஏதேனும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. என் முன்னிலையில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. நான் காவலர்கள் முன்பு வாக்குமூலம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.04 21:37:47 +0530

Assistant Sessions Judge

Melur